ஸ்ரீ திரிபுரசுந்தரீ ஸமேத ஸ்ரீசந்திரமௌளீசுவராய நம:

# ஆர்ய தர்மம்.

நல்லகார்பத்தைச் செய்துகொண்டிருப்பவன் ஒருபொழுதும்துர்கதி அடையமாட்டான்'' என்று பகவான் உபதேசித்திருக்கிறார். அவனவனுக்கு அவ்வப்பொழுது தோன்றுவதெல்லாம் நல்லகார்யமாய்விடமாட்டாது. சுருதிஸ்ம்ருதிமுதலிய பிரமாண நூல்களால் அவன்வனுக்கு எற்றவாறு செய்யவேண்டியதாக விதிக்கப்படுவதே நல்லகார்யமாகும் என்று ஆர்யர் கொண்ட கருத்து. இந்த நல்லகார்யத்தையே எக்காலத்திலும் எல்லாஜனங்களும் அனுஷ்டித்தார்கள். அல்லது அனுஷ்டிப்பார்கள் என்று சொல்லிவிடமுடியாவிடினும் பெரும்பாலும் பூர்வயுகங்களில் சுருதிவிஹிதாசாரத்தை எல்லோருமே அனுஷ்டித்துவந்தார்கள் எனத் துணிந்து சொல்லலாம். ஆனால்சில ஆஸுரப் பிரகிருதிகள் வேதவிஹிதத்தைச்செய்தும், சீலமில்லாமையால் போக-ஹிம்ஸாப்பிரதானர்களாய் புருஷார்த்தப் பிரஷ்டர்களானார்கள். அப்படியுள்ளவர்களும் ஒருசிலரேயாவார்கள். தற்காலத்திலோவெனில் கலிமஹிமையால் பெரும்பாலும்எல்லோருக்கும்-“விஷயாசையேசிறந்தது. விஷயபோகமேபெரிய புருஷார்த்தம். பரலோகம் என்பதே கிடையாது. ஒருக்கால் அது இருந்துவிட்டாலும் தேசஸேவை செய்வதினாலேயே - தாழ்த்தப்பட்டவரைத் தூக்குவதனாலேயே - சில உயர்தரவகுப்பாரைநசுக்குவதாலேயே சுயமாகவே அதுகிடைத்துவிடும்'' என்று தோன்றியிருக்கிறது. சீலத்தில் பிரியப்படுபவர் யாருமில்லை. வகுப்புவாதத்தை விலக்கவேண்டுமென்று சொல்லிக்கொண்டே அதைப் பலவிதத்திலும் விரித்துவருகிறார்கள். சாஸ்திரமுறையில் நான்கேவர்ணம் - நான்கே ஆசிரமம் வகுக்கப்பட்டது. இப்போதோவெனில் அதையழிக்கத்தலையெடுத்தவர் கற்பித்துக்கொண்ட வகுப்புப் பிரிவினைக்கு அளவேயில்லை. ஆர்யஸமாஜம் - ப்ரம்மஸமாஜம் ராமகிருஷ்ணஹோம். ப்ராம்மணரல்லாதார்கூட்டம் - காங்கிரஸ்கூட்டம் சுயமரியாதைச்சங்கம் - இராஜீயச்சங்கம் முதலிய பலவகுப்புக்கள்பிரிந்து விரிந்துவிட்டன. இவைகளின் உட்பிரிவுகளுக்குக் கணக்கேகிடையாது. இவ்வளவுவகுப்புக்காரர்களும் ஒருவர்போனவழி மற்றவர் நடப்பதில்லை. ஒருவர் சொல்லை மற்றவர்கேட்பதில்லை. எல்லோரும் பொதுநன்மைக்கு உழைப்பதாகவே பேசிக்கொள்ளுகிறார்கள். உயர்தர வகுப்பாரைப் பழிப்பதிலும் அழிப்பதிலும் இவர்களுக்கெல்லாம் அபிப்பிராயபேதமில்லை. அதற்காகப் பலவிதத்திலும் பிரயத்தனம் செய்துவருகிறார்கள். இந்த ஸங்கடத்தில் ஸநாதன தார்மிகள் மௌனம் சாதிப்பது சரியாகாது. ஆங்காங்கு ஸனாதனதர்மஸபை கூட்டவேண்டும். ஸாத்துவிகமுறையில் ஸாத்துவிக தர்மத்தை போதிக்க வேண்டும். சீலத்தை ஆசிரயிக்க வேண்டும். எல்லோரும் ஸனாதன தர்மத்தில் ஒருமைப்படவேண்டும். ஒருவருக்கும் துரோஹம் செய்யக்கூடாது. எல்லோரும் க்ஷேமத்தை அடைய வழிதேடவேண்டும். யாவரும் புகழும்படியான கார்யத்தைச் செய்யவேண்டும். பரஸ்பரம் த்வேஷத்தைப் பாராட்டாமல் ஒற்றுமைப்பட்டு க்ஷேமத்தையடையவேண்டும். சுபம்.

பத்திராதிபர்,

# ஆர்யதர்மம்.

ப்ரஜாபதி-ஸூ மார்கழிமீ ௨௳

## சீலம் சிறந்த சாதனம்.

சீலமொன்றிருந்தால் ஸர்வமும் கைகூடிவரும். அது ஒன்றில்லாவிடில் எதிருந்தும் பயன்படாது. இதைப்பற்றி பாரதம், சாந்திபர்வம் 124-வது அத்தியாயத்தில் விரிவாகக்கூறப்பட்டிருக்கிறது. தர்மபுத்திரர்—"தர்மம் முதலியவைகளுக்கு சீலமே மூலமென்கிறார்களே! அதன் சொரூபத்தையும், அதையடைய உபாயத்தையும் அறியவிரும்புகிறேன். சொல்லவேண்டும்"—என்று பீஷ்மாசாரியரைக்கேட்க, அப்பெரியாரும் சொல்லத் தொடங்கினார்—தர்மபுத்திரா! நீ இந்திரப் பிரஸ்தத்தில் தம்பிமார்களோடு மயன் செய்துகொடுத்த மணிமயமான திவ்ய ஸபையில் சிறந்த செல்வத்துடன் சீராகவாழ்ந்துவருவதைக்கண்டு ஸஹிக்காமல் துர்யோதனன் தபிப்பதைப்பார்த்து திருதராஷ்டிரர்—"குழந்தாய்! ஏன் தபிக்கிறாய்? என்ன குறைவு? ஸகலஐச்வர்யமும் உனக்கு கிடைத்திருக்கிறதே! நூறு ஸஹோதரர்களும் கிங்கரர்களாயிருக்கிறார்களே! பந்துக்களும் ஸ்நேஹிதர்களும் கொண்டாடுகிறார்களே! பட்டாடை உடுக்கிறாய். பரமான்னம்புசிக்கிறாய். படைசூழச்செல்கிறாய். ஒரு குறைவுமில்லையே! ஏன் வருத்தப்படுகிறாய். காரணத்தைக கூறுவாயாகில் அதைப்போக்க வழிகூறுகிறேன்"-என்றுகேட்டார். அப்பொழுது துர்யோதனன்—"பதினாயிரம் பிராம்மணர்கள் தர்மபுத்திரன் பந்தியில் தங்கப்பாத்திரத்தில் அருசுவை அன்னத்தைப் புசிக்கிறார்கள். மணிமயமான ஸபையின் அழகும், சிங்காரத்தோப்பின் சிறப்பும், சதுரங்க ஸைன்யத்தின் சாதுர்யமும் பார்க்கப்பார்க்க ஸஹிக்கமுடியவில்லையப்பா. அந்தச்செல்வம் எனக்கு எப்படிக்கிடைக்கும்" என்று கேட்க திருதராஷ்டிரர்—"குழந்தாய் தர்மபுத்திரனைப்போல் தரணியிலிருக்கவேண்டுமாயின் அவனைப்போல் சீலவானாயிரு. தர்மனைப்போல் வாழலாம். அவனுக்குமேலுமிருக்கலாம். சீலத்தால் மூவுலகை

யும் ஜயிக்கலாம், சீலவான்களுக்கு ஸாதிக்கக்கூடாத கார்யமொன்றுமில்லை. மாந்தாதா நாபாகன் முதலிய முன்னோர்கள் சீலத்தாலேயே சக்கிரவர்த்திகளாயும், கீர்த்திமான்களுமாயிருந்தார்கள். அவர்கள் குணத்திற்கீடுபட்டு பூமிதேவி சுயமாகவே வந்தாள்'' என்றார். அந்த சீலத்தை அடைவதெப்படி என்றுகேட்ட துர்யோதனனுக்கு பிரஹ்லாதனுக்கும் இந்திரனுக்கும் நேர்ந்ததைக் கூறினார்.—அதாவது பிரஹ்லாதனென்னும் பக்தசிரோமணி பரம சீலமுள்ளவனாக இருந்தபடியால் திரைலோக்கிய ஸாம்ராஜ்யத்தையும் அடைந்துவிட்டாராம். இந்திரனுடைய ராஜ்யமுமிவர் அதீனமாய்விட்டதாம். அப்பொழுது தீனதசையையடைந்து தேவேந்திரன் பிருஹஸ்பதிபகவானைக்கேட்க்க அன்னாரும் சீலத்தின் மஹிமையால் அப்படி நேர்ந்ததையும் அந்தசீலம்வேண்டுமானால் பிரஹ்லாதனிடமிருந்து கற்றுக்கொள்ளவேண்டுமென்பதையும் சொல்லக்கேட்டு தேவராஜனும் பிராம்மணரூபந்தரித்து பிரஹ்லாதரிடம் சிஷனாயிருந்து அவருபதேசித்த சீலத்தின் சொரூபத்தையும் அதனால் திரைலோக்கிய ராஜ்யத்தையடைந்ததையும், பிராம்மணர்களிடம் அவருக்கிருந்த பக்தியையும், அவர்களது உபதேச அமுதமொழிகளால் கிடைத்த ஞானாதிசயத்தையும் விஸ்தாரமாகக்கேட்டுக்கொண்டு சிசுருஷை செய்துவந்தார், சிசுருஷையால் சந்தோஷப்பட்ட பிரஹ்லாதர் பிராமணரூபியான இந்திரனைப் பார்த்து வரங்கேட்டுக்கொள்ளும்படிசொல்ல—இதுவரைசெய்த உபதேசமே பெரிய வரமாயிற்றே அதுவே போதுமென்று இந்திரன் சொல்லியதையும் கேளாமல் அவசியம் ஏதாவது வரனை நீ வேண்டிக்கொள்ளவேண்டும். அதுவிஷயத்தில் எவ்விதயோசனையும் செய்யவேண்டாமென்று மீண்டும் பிரஹ்லாதர்சொல்ல, தேவேந்திரன்—'' தம்முடைய சீலம்முழுவதும் என்னிடம் வந்துவிடவேண்டும்'' என்றுவேண்டினான். பிரஹ்லாதர் ஸத்தியத்தை விடமுடியாமல் வருத்தப்பட்டு அதைக்கொடுத்துவிட்டார். உடனே வரிசையாய் ஒன்றன்பின் ஒன்றாக தர்மம், ஸத்தியம், நன்னடத்தை, பலம், ஸ்ரீதேவி இவர்கள் உருவெடுத்துக்கொண்டு பிரஹ்லாதர் தேஹத்தினின்றும் வெளிப்பட்டார்கள். ஒவ்வொன்றும் வெளிப்படுகையில் நீ யார் என்று கேட்பார். அததுவும் தன் தன் பெயரைச்சொல்லிக்கொண்டு வெளிப்பட்டபின் கடைசியாக ஸ்ரீதேவி

धर्मः सत्यं तथा वृत्तं बलंचैव तथाप्यहम् ।
शीलमूला महाप्राज्ञ सदा नास्त्यत्र संशयः ॥

என்றாள். பிறகு வாய்பெற்ற அந்த தேவராஜன் சீலத்தின் மஹிமையால் ஸாம்ராஜ்யத்தையடைந்து சுகமாயிருந்தார். அதுபோல துர்யோதனா! நீயும் சீலவானாயிருப்பாயானால் ஸாம்ராஜ்யத்தை அடைவாய் என்றார் திருதாஷ்டிரர், உடனே துர்யோதனன் சீலமென்றால் என்ன— என்று கேட்கும்பொழுது

अद्रोहस्सर्वभूतेषु कर्मणा मनसा गिरा ।
अनुग्रहश्च दानंच शीलमेतत्प्रशस्यते ॥

'எல்லா பிராணிகளிடத்திலும் மனோவாக்காயங்களாகிய திரிகரணங்களாலும் துரோஹமில்லாமலிருப்பதும், அனுக்ரஹபுத்தியும் தானமும் சிறந்த சீலமாகும்'' என்று சுருக்கிச்சொன்னார். இதில்—

यद्यप्यशीला नृपते प्राप्नुवन्ति श्रियं क्वचित् ।

“சீலமில்லாதவர்களும் ஸ்ரீயை அடைகிறார்களே! சீலம் ஸர்வகாரணமென்றதெப்படி'' என்று சங்கைசெய்துகொண்டு அதற்கு பரிஹாரமாக-

न भुंजते चिरं तात समूलाश्च पतन्ति ते ।

“நீண்டகாலமவர்கள் ஸ்ரீயை அனுபவிக்கமாட்டார்கள். சீலமில்லாமையால் ஸமூலமாயழிந்துவிடுவார்கள்'' என்று திருதாஷ்டிரர் உபதேசித்து முடித்தார். அச்சீலத்தையே நீயும் பிராதாக்களுடன் பின்பற்றிநடந்துகொண்டுவா என்றுதர்மபுத்திரருக்குபீஷ்மாசாரியார் உபதேசித்தார். யாவரும் அந்த சீலத்தை யாசிரயித்து சிரேயஸ்ஸையடைவாராக. சுபம்.

பத்திராதிபர்.

---

# மத்வாவதாராத்புதலீலாரகஸ்யங்கள்

(996-ம் பக்கத்தொடர்ச்சி.)

மாத்வர்கள் பிஷ்டபசுவினால் யாகம்செய்கிறார்கள் என்பதையும் அவ்விதம் அவர்கள்செய்வது உசிதம்தான் என்பதையும் ஸ்ரீமான்

வேங்கடாத்வரி விசுவகுணாதர்சம் என்னும் கிரந்தத்தில் கூறியிருக்கிறார். அதாவது—

एकादश्यां कालयोर्होमहानादेषामग्लौकिकत्वं यदागात् ।
तस्मादेषां ह्यर्थहिंसानिवृत्त्यैस्यादुत्कृष्टः पिष्टपश्वादरोऽपि ॥

'வேதத்தில் பிரத்யக்ஷமான பசுவினால் யாகம்செய்யும்படி விதித்திருக்க அதையும்விட்டு மாத்வர்கள் யாகத்தில் பிஷ்டபசுவை ஆதரிப்பது சிலாக்யம்தான். ஏனெனில் பசுவின் வபைமுதலிய அங்கங்களை ஹோமம்செய்யவேண்டியது சாஸ்திரீய ஸம்ஸ்காரங்கள் அமைந்த ஆஹவனீயம் முதலிய அக்னியில்தான். சமையல்கூட்டு அக்னிபோலொத்த லௌகிகாக்கினியில் செய்யக்கூடாது.

அவ்விதம்லௌகிகாக்னியில் ஹோமம்செய்தால் பசுவை வதம்செய்து அதன் அங்கங்களை ஹோமம் செய்ததாலுண்டான பயனில்லை. வீணாகப் பசுவைவதம்செய்வதால் பாபந்தான் ஸம்பவிக்கும். மாத்வர்களுடைய யாகத்தில் உள்ள அக்னியோ லௌகிகாக்னிதான், ஏனெனில் ஒருகாலம் ஹோமம் செய்யாமல் இருந்தால் ஆஹவனீயம் முதலிய நித்யம் தார்யமாயுள்ள அக்னி லௌகிகாக்னியாக ஆய்விடுகிறது, என்று சாஸ்திரங்களில் கூறப்பட்டிருக்கிறது. மாத்வர்களோ ஏகாதசியன்று ஸ்நானம்ஸந்தியை விஷ்ணுவின் ஆராதனம் என்னும் மூன்றுகார்யங்களைத்தவிர மற்ற அக்னிஹோத்ரம் சிராத்தம்முதலிய கர்மங்களைச்செய்கிறதில்லை. ஆகையால் அன்று பிராதக்காலம் ஸாயங்காலம் இரண்டுகாலங்களிலும் அக்னியில் ஹோமம்செய்யாததால் அவர்களுடைய அக்னி லௌகிகாக்னியாக மாறிவிட்டது. ஆகையால் அவர்கள் பிஷ்டபசுவை ஆதரிப்பது உத்தமம்தான்'' என்று. இவ்விதம் மாத்வர்கள் செய்யும் பிஷ்டபசு யாகத்தில் பசு ஹிம்ஸையின் பிரஸக்தியே இல்லாததால் யாகத்தில் பசு ஹிம்ஸையால் தோஷம் உண்டோ என்று சங்கித்துக்கொண்டு தோஷமில்லையென பரிஹாரம் சாஸ்திரங்களில் செய்யவேண்டியது மாத்வர்களுக்கு அவச்யமேயில்லை. ஆகையால் திருச்செங்காட்டாங்குடி என்னும் க்ஷேத்திரத்தில் பூர்வகாலத்தில் சிறுத்தொண்டநாயனார் என்னும் பக்தர் தன்னைப் பரீக்ஷிக்கவந்த பகவானுக்குத் தனது பிள்ளையை கரியாக்கி சமையல்செய்த வைபவமாகிய ஐதிஹ்யத்தை வெளி

யிட மாவினால் பிள்ளைபோல்செய்து அதைக்கரிபண்ணி பகவானுக்கு நிவேதனம்செய்து உத்ஸவத்தைக் கொண்டாடுவதுபோலவும், ஸ்ரீராமமூர்த்தியின் சரித்திரத்தை உலகத்திற்கு அறிவிக்க நாடகசாலையில் ராமவேஷம் தரித்துக்கொண்டு நடர்கள் அபிநயம் செய்வதுபோலவும், பெண் குழந்தைகள் மரப்பாச்சிமண்கல் மண்பாத்திரங்கள் முதலியதை வைத்துக்கொண்டு பெரிய பெண்டீர்களைப்போல் தாமும் சமையல் செய்வதும் சாப்பிடுவதுமாகிய பாவனையைக் காட்டுவதுபோலவும் அத்வைதிகள் விசிஷ்டாத்வைதிகள் முதலியவர்கள் யாகம் செய்வதுபோல் த்வைதிகளும் மாவினால் பசுசெய்து யாகபாவனையைக்காட்டுவது உலகப்ரஸித்தமான விஷயம். இவ்விதம் அவர்கள் ப்ரத்யக்ஷமான பசுவை உபயோகிக்காமல் பிஷ்டபசுவை உபயோகம் செய்யும்படி நேரிட்டது. அந்தரங்கத்தில் மத்வமதம் சார்வாகமதமானதால் வேதபாஹ்யத்வப் ப்ரத்யா ஸத்தியால் தனக்குப் பௌத்தமதம் அபிமானபாத்ரமானதால் பௌத்தமதக் கொள்கைப்படி யாகத்தில் பசுஹிம்ஸைகூடாதானபடியாலும் தான்கொண்ட ப்ரச்சன்ன சார்வாகாவஸரத்திற்கு அனுகுணமாக வெளிக்கு யாகம் மாத்திரம் செய்யவேண்டியது அவச்யமானதாலும் என்பது த்வைதமத தத்துவங்களை ஆராய்ந்துபார்க்கும் புத்திமான்களுக்கு ஸ்பஷ்டமாய்வெளியாகும் விஷயம்.

மேலும் த்வைதமதம் அந்தரங்கத்தில் பௌத்தமதத்தில் அபிமானங்கொண்டது என்னும் ரஹஸ்யம் தற்காலம் ஸ்ரீ உத்தராதிமடத்தில் புத்த ஜயந்தி தினத்தில் புத்ததேவருக்குப் பூஜை முதலியது நடந்ததை ப்ரத்யக்ஷமாகப்பார்த்த பெரியோர்களுக்கு உள்ளங்கை நெல்லிக்கனிபோல் ஸ்பஷ்டமாய் புலப்பட்டிருக்கும். ஆனால் ஸ்ரீமான் கிருஷ்ணாசார் செய்த உபன்யாஸ சுருக்கத்தில் புத்தரைக்கொண்டாடினதற்குக் காரணம் வேறு கூறப்பட்டிருக்கிறது. அந்த காரணத்தைக்கொண்டு மத்வமதம் வைதிகம் பௌத்தமதாபிமானமில்லாததென நினைக்கக்கூடாது. கீழ்க்காட்டிய காரணங்களால் அந்தரங்கத்தில் மத்வமதம் பௌத்தமதாபிமானமுள்ளதே. ஆனால் மத்வமதம் வெளிக்கு வைதிகமதவேஷம்போட்டிருப்பதால் வைதிக கோஷ்டியில் தனது பௌத்தமதாபிமானம் வெளியாகவும் கூடாது. அந்தரங்கமாகப் பௌத்தமதத்தை அபி

மானிக்கவும் வேண்டும். அதற்காகவே வைதிககோஷ்டிக்கு வேறு காரணங்காட்டி பௌத்தமதாபிமானமில்லாததுபோல் அபின யித்து அந்தரங்கமாகப் புத்ததேவருக்கு ஷோடசோபசார பூஜை ஒழுங்காக நடத்தப்பட்டது என்பதை என்னமறைத்தாலும் புத்தி மான்கள் அறியாமலிருக்கமாட்டார்கள்.

இதற்கு உதாஹரணமாகச் சிவபக்தவிலாசத்தில் சாக்யநா தர் என்னும் பக்தருடைய சரித்திரமொன்றுண்டு. அது வரு மாறு—சாக்யநாதர் என்னும் புத்தமதத்தைச்சேர்ந்த ஒருவர் சங்கபுரமென்னும் சிவக்ஷேத்ரத்திற்கு ஸமீபத்திலிருக்கும் பௌத்த நகரத்திலுள்ளவர். பெரியோர்களின் மூலம் பரமசிவனது மஹிமையை அறிந்து அவரிடத்தில் அதிகபக்தி உள்ளவராய்ச் சிவபூஜை செய்யக்கருதித் தனது பௌத்தமதஸ்தர்களாகிய பந் துக்களுக்கு அது இஷ்டப்படாதானபடியால் பஹிரங்கமாகச் சிவ பூஜைசெய்யமுடியாமையால் வெளியில் அவர்களுக்கு அனுகூல மாக நடப்பவர்போல் அபினயித்து அந்தரங்கமாகச் சிவபூஜை செய்யநினைத்து விபூதி ருத்ராக்ஷங்களைத் தரிக்காமலே பிரதிதின மும் காலையில் நதியில் ஸ்நாநஞ்செய்துவிட்டுப் பஞ்சாக்ஷரத்தை மனதாலேயே ஜபித்துக்கொண்டு சங்கபுரம்போய்ச் சிவஸந்நிதி யில் நின்றுகொண்டு மனதாலேயேநமஸ்கரித்தும்பஞ்சாக்ஷரத்தை ஸ்மரித்துக் கல்லுகளையே புஷ்பமாகப்பாவித்துச் சிவனது சிரஸில் எரிந்துகொண்டே வந்தார். அதனால் பௌத்தர்கள் மிகவும் ஸந்தோஷப்பட்டு அவரைக்கொண்டாடினார்கள். சாக்ய நாதர் இவ்விதம் தவறாமல் பிரதிதினமும் சிவாராதனஞ்செய்து வருங்காலத்தில் ஒருநாள் பரமசிவனது பரீக்ஷையினால் ஓரிடத்தி லும் கல்லு அகப்படாமல் தனது விரதம் பங்கத்தை அடையும் படி நேரிடவே தனது சிரஸ்ஸையே தூணில் முட்டிக்கொண்டு பிடுங்கி பகவானுடையசிரஸில் எறிய எண்ணிப் பிரவிருத்திக்கவே ஆப்யந்தரமான பக்தியில்மாத்திரம் பிரியப்படுபவரும் பாஹ்யாடம் பரங்களை அபேக்ஷிக்காதவருமான பரமசிவன் உடனே ஆவிர்ப வித்து அவரைத்தடுத்து அவருக்கு முக்தி கொடுத்தருளினார் என்று சரித்திரம். இந்த சாக்யநாதரைப்போலவே அவருக்கு மாறுதலாக வைதிகமதத்தில் பிறந்து வைதிக கோஷ்டியின் திருப் திக்காக வேறுகாரணங்களைக்காட்டி பௌத்தமதப்பற்றில்லாதது போல் அபினயித்து அந்தரங்கமாக மத்வமதத்தில்நடக்கும் புத்த

தேவாராதன வைபவத்தைக் கண்ணால் பார்க்கும் எந்த புத்தி மானுக்குத்தான் அதன் உண்மை விளங்காமல்போகும். ஆகை யால் அத்வைதமதம் பௌத்தமதாபிமானமுள்ளது என்பது அசைக்கமுடியாத விஷயம் அத்வைதமதம் பௌத்தமதப்பற் றுதலுள்ளது என்பதற்கு இன்னும் அநேக காரணங்களிருக்கின் றன, அவற்றை விரிக்கில் பெருகும். ஆகையால் மற்றுமோர் ஸமயத்தில் அவற்றை விஸ்தாரமாகவிரிப்பாம். இத்துடன் இந்த இரண்டாவது ரஹஸ்யத்தைப் பூர்த்திசெய்து கொள்ளுகிறேன், அடுத்த ரஹஸ்யங்கள் அடுத்த ஸஞ்சிகையில் வரும். சுபம்.

போலகம் ஸ்ரீ. ஸ்ரீராம சாஸ்திரி,

---

ஓம்:

## தஞ்சை ஜில்லா பிராம்மண மஹாஸபை. கும்பகோணம்.

---

1930-ஞு ஜூலை மீ 1உ முதல்
1931-ஞு அக்டோபர்-மீ 31உ முடிய
இரண்டாம் வருஷத்திய ரிபோர்டு.

சென்றஞு அக்டோபர்மீ 12உயில் ஸ்ரீரங்கம் ராஜாபகதூர் G. கிருஷ்ணமாச்சாரியார் M. L. A. அவர்கள் தலைமையில் நடந் தேறிய வருடாந்திர பொதுக்கூட்டத்தில் பிர்மஸ்ரீ திவான்பகதூர் V. K. இராமானுஜாச்சாரியார் அவர்கள்சபை அக்கிராஸனாராகவும் பிர்மஸ்ரீ R. சுவாமிநாதய்யர் B. A. L. T. அவர்களும் பிரம்மஸ்ரீ தாதாசார்ஸ்வாமி அவர்களும் உப அக்கிராஸனர்களாகவும் பிரமஸ்ரீ S. மஹாலிங்கய்யர் கார்யதர்சியாகவும், அக்னிஹோத்ரம் பிர்மஸ்ரீ கோபாலதேசிகாச்சார்யார் அவர்கள் உபகாரியதரிசி யாகவும் பிர்மஸ்ரீ சேங்காலிபுரம் S. ஸ்ரீனிவாஸய்யர் B. A. B. L. அவர்கள் பொக்கிஷதாரராகவும்தேர்ந்தெடுக்கப்பட்டனர். நிர்வாக காரியகமிட்டி அங்கத்தினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

ஸபை மெம்பர்கள்:—

சென்ற வருஷம் இந்நகரில் (1930ஞு மேமீ 31உ ஜூன் 1உயில்) நடத்தப்பட்ட சென்னை மாகாண ப்ராம்மணர் மஹா நாட்டில் பிரதிநிதிகளாக இருந்த 357 பேரும் ஜில்லா சபை

அங்கத்தினர்களானார்கள். தவிர நாளதுதேதி வரையில் 135 அங்கத்தினர்கள் சேர்ந்திருக்கின்றனர். ஆக 492 அங்கத்தினர்கள் இருக்கின்றனர். ஜில்லாவில் திருவிடைமருதூர், நாகபட்டணம் மெலட்டூர் இவ்விடங்களில் பிரத்யேகமான பிராம்மண ஸநாதன தர்ம சபைகள் எற்பட்டு நடந்தேறிவருகின்றன.

மீட்டிங்குகளும் உபன்யாஸங்களும்:—

இந்த ரிப்போர்டுக்குள்ளடங்கிய காலத்தில் பொது ஜனக் கூட்டங்கள் 28-ம், நிர்வாக காரியகமிட்டிக்கூட்டங்கள் 7-ம் நடந்திருக்கின்றன. இவைகளில் முக்கியமாக பாலிய விவாஹத்தடை சட்டத்தை ரத்துசெய்யவும், தீண்டத்தகாதவர்கள் ஆலயப்பிரவேசம் முதலிய தர்மவிருத்தமான காரியங்களைச் செய்யவொட்டாமல் தடுக்கவும், பொதுஜனங்களை ஒற்றுமையுடனிருந்து பாடுபட வேண்டுமென்றும், காங்கிரஸும், சர்க்காரும் இம்மாதிரியான தர்மானுஷ்டானமத சம்பிரதாயங்களுக்கு விரோதமான இயக்கங்களுக்கு ஆதரவளிக்கக்கூடாது என்றும், பொது ஜனங்களையும் காங்கிரஸ் தலைவர்களையும், சர்க்காரையும் கேட்டுக்கொண்டிருக்கின்றனர். 21 உபந்யாஸங்கள் மதஸம்மந்தமான அரிய பெரிய விஷயங்களைப்பற்றி நடந்திருக்கின்றன. அதன் விவரம் இதனடியில் கண்டிருக்கிறது.

இந்த ஜில்லாவில் மகாநாடுகள்:—

இந்த ஜில்லா 3-வது பிராம்மண மகாநாடு மன்னார்குடியில் 1931-ஞு மார்ச்-மீ 21, 22உகளில் திருவாங்கூர் பென்ஷன் திவான்பேஷ்கர் பிர்மஸ்ரீ N. சுப்பிரமண்ய அய்யர் அவர்கள் தலைமையில் கூட்டப்பட்டது. மகா-ா-ா-ஸ்ரீ K. S. சிவசுப்பிரமணிய அய்யர் M. L. C. அவர்கள் மிக்க சிரத்தையுடன் மகாநாட்டுக்கு விஜயம் செய்திருந்த பிரதிநிதிகளின் போஜன வசதியை கவனித்து ஆதரவு அளித்தார். தஞ்சாவூர் அட்வகேட் பிர்மஸ்ரீ G. V. லெக்ஷ்மணசாஸ்திரிகள் அவர்களின் முயற்சியின்பேரில் தஞ்சாவூரில் 1931-ஞு மே-மீ 10உதேதியன்று கும்பகோணம் மஹாமஹோபாத்யாய பிர்மஸ்ரீ யஞ்ஞஸ்வாமி சாஸ்திரிகள் அவர்களின் அக்ராஸனத்தின்கீழ் ஓர் மகாநாடு நடத்தப்பட்டது. அதற்கு இச்சபையிலிருந்து பிரதிநிதிகள் சென்றிருந்தனர்.

இதரஜில்லாவில் மகாநாடு, (மாகாண மகாநாடு):—

1931-ஹு அக்டோபர்மீ 24உ வட ஆர்க்காடு ஜில்லா சித்தூரில் சென்னை மாகாண ஸநாதனதர்ம மகாநாடு, நெல்லூர் அட்வகேட் பிர்மஸ்ரீ A. S. கிருஷ்ணராவ் அவர்கள் அக்கிராஸனத்தின்கீழ் நடந்தேறியது. ஆந்திரதேசத்திலிருந்தும் தமிழ் நாட்டிலிருந்தும் பிரதிநிதிகள் சென்றிருந்தனர். இச்சபையிலிருந்தும் பிரதிநிதிகள் சென்றிருந்தனர்.

ஸபையின் வரவு செலவு:—

12—8—30ல் பரிசீலனை செய்யப்பட்ட கணக்குப்படி சென்ற வருடம் மாகாண மஹாநாட்டில் செலவழிக்கப்பட்டது போக பாக்கித் தொகையும், பிராம்மண மஹாஸபையில் சென்ற வருடம் செலவழிக்கப்பட்டதுபோக பாக்கியும் ஆக கூடுதல் ரூ 1110—5—7வுடன் இரண்டாம்வருடம் ஆரம்பமாகியது. வட்டியில் ரூ. 37—13—1ம், சந்தாவில் ரூ. 77—5—6ம், ஆக ரூ: 115—2—7 வரவு வந்திருக்கிறது. செலவு ரூ. 576—5—9 போக பாக்கி பாங்கியில் இருப்புத்தொகை ரூ. 632—3—10. பொக்கிஷதாரிடம் இருப்பு ரூ. 16—14—7.

இச்சபையின் கணக்குகளைப்பரிசீலனை செய்து வரவு செலவு இருப்புப்படி தயாரித்துக்கொடுத்த பிர்மஸ்ரீ G, V. வெங்கட்டராமய்யர் B. A. B, L. அவர்களுக்கு இச்சபை விசேஷ நன்றிபாராட்டுகிறது.

முடிவுரை:—பகவானுடைய அநுக்ரஹத்தினுல் இந்தசபை மேற்கொண்ட ஸத்காரியம்இன்னும்விசேஷமாயும் விஸ்தாரமாயும் நடந்தேறுவதற்கு மேல்மேலும் அநேக ஆஸ்திகர்கள் சேர்ந்து உற்சாகத்துடனும், அன்புடனும், தர்மத்தையும், ஸத்யத்தையும், நிலைநிறுத்த உதவிபுரியவேண்டுமென்றுகூ பிரார்த்திக்கிறோம்.

---

# உபந்நியாஸங்கள்

| நெ. | தேதி. | விஷயம். | உபந்நியாஸகர். |
|---|---|---|---|
| 1,2 | 1930ஸு நவம்பர்மீ 8,9உ | வேதங்களைப்பற்றிய ஆராய்ச்சி. | பிரம்மஸ்ரீ ப்ரொபெஸர் D. T. தாதாசாரியர் ஸ்வாமிகள் அவர்கள் M. O, L. |
| 3 | ,, டிஸம்பர்மீ 21உ | பகவத்கீதை. | ஸ்ரீமான் K. A. ரெங்கஸாமி அய்யங்கார். |
| 4,5,6 | ,, டிஸம்பர்மீ 28,29,30உ | பாகவதஸாரம், | பண்டிதரத்னம் தேரழுந்தூர் பிர்மஸ்ரீ T.K. ஸ்ரீநிவாஸாசாரியா. |
| 7 | ,, 31உ | யக்ஷப்ரச்னம். | |
| 8 | 1931 பிப்ரவரிமீ 4உ | பிராம்மணர்கள் தற்காலநிலைமையும், அவர்களின் கடமையும். | பிர்மஸ்ரீ V. S, இராமநாத சாஸ்திரிகள். |
| 9 | ,, மார்ச்சு மீ 2உ | ஸ்ரீமத்பாகவதம். | பாலக்காடு அட்வகேட் பிர்மஸ்ரீ M. K. வெங்கடேசுவரய்யர். |
| 10, 11 | ,, எப்ரல்மீ 4,5உ | வேதங்கள், ஸநாதனதர்மத்தின் முக்கிய தத்துவங்கள். | பிர்மஸ்ரீ V. S. இராமநாத சாஸ்திரிகள். |
| 12—15 | ,, ஆகஸ்டுமீ 4,5,6,7உ | ஸநாதன தர்ம மார்க்க சரித்திரம், அதன் தத்துவநிரூபணம் ஸநாதன தர்மத்தின் பிரகாரம் ஒவ்வொரு மனுஷ்யனும் ஸமூஹங்களும் க்ஷேமம்அடையவேண்டியவழி, விவாஹ தத்துவங்கள், | பிர்மஸ்ரீ. U. P. கிருஷ்ணமாச்சாரியார். |
| 16 | ,, செப்டம்பர்மீ 29உ | பிராம்மண்ணிய ரக்ஷணம் | பிர்மஸ்ரீ V. S. இராமநாத சாஸ்திரிகள் |
| 17-19 | ,, அக்டோபர்மீ 30உ 1,5உ | ஸந்தியாவந்தனம். | |
| 20 | ,, ,, 6உ | புருஷார்த்தங்கள் | |
| 21 | ,, ,, 7உ | லோகமும், வேதமும் | |

கும்பகோணம்,
16—11—1931.

S. மஹாலிங்க அய்யர்.
காரியதர்சி.

## தஞ்சை ஜில்லா பிராம்மண மஹாஸபை கும்பகோணம்.
## 1930, ஜூலைமீ 1௳ முதல் 1931, அக்டோபர் மீ முடிய வரவு செலவு கணக்கு கோஷ்பாரு.

---

| வரவு. | | ரூபா. அ. பை. |
|---|---|---|
| 1930 ஜூலை 1௳யில் இருப்பு தொகை ... | ரூ | 1110—5—7 |
| வட்டியினால் வரவு ... ... ... | ரூ | 37—13—1 |
| சந்தா வரவு. ... ... ... ... | ரூ | 77— 5—6 |
| ஆ. | ரூ | 1,225— 8—2 |

| செலவு | | ரூபா. அ. பை |
|---|---|---|
| குமாஸ்தா சம்பளம் ... ... ... | ரூ | 235— 0 —0 |
| ஸம்பாவனைகள் ... ... ... | ரூ | 118— 8 —0 |
| மீட்டிங்கு, உபந்நியாஸங்கள் ... ... | ரூ | 27— 0 —0 |
| அச்சுக்கூலி வகையரு ... ... ... | ரூ | 71—13—3 |
| ஸ்டேஷனரி சாமான்கள் ... ... | ரூ | 21—11—3 |
| தபால், தந்தி வகையரு ... ... | ரூ | 76... 5 —0 |
| வண்டிசத்தம் சில்லரைச் செலவு ... | ரூ | 25—15—6 |
| கும்பகோணம்பாங்கு S. B. கணக்கில் இருப்பு | ரூ | 632— 3 -10 |
| பொக்கிஷதார் வசம் ... ... ... | ரூ | 16— 14—7 |
| ஆ. | ரூ | 1,225— 8 —2 |

---

### ஆடிட்டர் ரிபோர்ட்

கும்பகோணம் தஞ்சைஜில்லா பிராம்மண மஹாஸபையின் 1-7-1930 முதல் 31-10-1931 முடிய வரவு செலவு கணக்குகளை ரசீது வவுசர்களுடன் பரிசோதனை செய்தேன். கணக்குகள் சரிவர வைக்கப்பட்டிருக்கின்றன.

கும்பகோணம்
16-11-31

C. V. வெங்கட்டராமய்யர்,
ஆடிட்டர்.

# கிருஹஸ்தாசிரம சபை

ஆர்யதர்மத்தின் முக்கிய அம்சம் ஆசிரமதர்மம். இந்த ஆசிரமதர்மம் கைவிட்டதினால்தான் நம்முடைய சனாதனதர்மம் குறைந்துபோய்விட்டது. அதை இப்பொழுது நம்மால் இயன்ற மட்டும், ஈசுவர கிருபையை முன்னிட்டு உத்தாரணம் செய்ய பிரயத்னப்படவேண்டியது. எந்த ஊரில் 10 ஆஸ்திக குடும்பமிருக்கிறதோ அவைகளெல்லாம் சேர்த்து ஒரு ஆஸ்திகசபை ஏற்பாடு செய்யவேண்டும். நடவடிக்கைகள் முதலானது அவரவர்கள் மாத்ருபாஷையிலோ அல்லது தேவபாஷையான ஸம்ஸ்கிருத பாஷையிலோ நடத்தவேண்டும், அவர்கள் முக்கியமாக உபாகர்மம், காயத்ரீஜபம், மஹாசிவராத்திரி, கார்த்திகை தீபம், சங்கராந்தி, தீபாவளி மற்ற முக்கியமான தினங்களில் பொதுவாக இருக்கும் ஆலயங்களிலோ, அல்லது பொதுவாக இருக்கும் சத்திரம் முதலிய இடங்களில் கூடவேண்டியது. அப்பொழுது அந்த ஊரில்படித்து, யோக்யதை உள்ளவர்களைக்கொண்டு சாஸ்திரவிஷயமாய் பிரசங்கமோ, புராண சிரவணமோ செய்யும்படி செய்யவேண்டும். கூடியமட்டும் தென்தேசத்திற்கு அனுசாரணையான "வைத்தினக தீக்ஷதீயம்" இவைகளைப்பற்றி ஜனங்களுக்குச் சொல்லவேண்டிய இவ்விஷயத்தைப்பற்றி செலவுகள் ரொம்ப இருக்காது. அவரவர்கள் வீட்டில்நடக்கும் வைதிக கர்மாக்களில் கொஞ்சம் சம்பாவனை இதற்கு (யதாசக்தி) குறிப்பிட்டுவைத்தால் போதுமானது. இதில் முக்கியமாக கவனிக்கவேண்டியது

ஆஸ்திகப் பிரசாரம்.

தமிழ்நாட்டிற்கு வெளியில் தெலுங்கு தேசம், கன்னட தேசம், மஹாராஷ்டிரதேசம், மலையாளம், மற்றும் லங்கை, யாழ்ப்பாணம், வடக்குதேச ஹிந்துஸ்தான் மற்றும் வெளிநாடுகளிலுமிருக்கிற ஆஸ்திகர்களுக்கும் இதேமாதிரி ஏற்பாடுசெய்ய பிரசாரகர்கள் அனுப்பவேண்டியது அவசியம். மேலும் இந்த ஆஸ்திகஸபை அங்கிருக்கும் ஆலயங்கள் சரியானபடி நடத்தப் பட்டு வருகின்றனவா என்று கவனிக்கவேண்டும்.

இவர்கள் முக்கியமாக தேவபாஷை பயில்வது ஒரு அம்சமாக இருக்கவேண்டும். வடதேசங்களில் ஹிந்துக்கள் பொது

வாக அதிலும் பிராம்மணர்கள் சாதாரணமாக கீர்வாண பாஷை பயிற்சி உள்ளவர்களாயிருக்கின்றார்கள். தென்னாட்டில் அதிலும் தமிழ்நாட்டில்ஆர்யபாஷையானஸம்ஸ்கிருதம் க்ஷீணகதி அடைந்து கொண்டிருக்கிறது. அதனால் ஜனங்களுக்கு ஆஸ்திக்யத்தில்நம்பிக்கையும், பக்தியும்குறைகின்றது. கட்டாயமாய் தேவபாஷை பயிற்சிக்காக ஏற்பாடு செய்யவேண்டும்.

மேலும் ஒவ்வொரு இடத்திலிருக்கும் வைதிக புரோஹிதர்கள் கும்பகோணம் மடம் ஆசார்ய ஸ்வாமிகள் பண்டித ஸதஸில் பரீக்ஷைசெய்து ஸ்ரீமுகம்பெற்றவர்களாயிருக்கவேண்டும். அவர்களுக்கு ஒவ்வொரு கர்மாக்களுக்கும் தக்ஷிணை முதலான விவரங்களும் தற்காலத்துக்கு தகுந்தபடி நிர்ணயிக்கவேண்டும். இது முக்கியமாக பல பிரமுகர்கள் சேர்ந்து தீர்மானம் செய்யவேண்டிய விஷயம்.

ஆஸ்தீக பக்தியுடைய கிருஹஸ்தர்கள் இவைகளைக்கவனித்து அவரவர்கள் இருக்கும் இடங்களில் ஒரு சபை ஏற்படுத்துவார்களென்று வணக்கமாய் கேட்டுக்கொள்ளுகிறேன், K. S.

---

## ஆஸ்திகாச்ரமம்.

---

எப்பொழுது ஆச்ரமம் கைவிடப்பட்டதோ அப்பொழுது ஸநாதன தர்மத்திற்கு இந்த புண்யபூமியில் குறைவுவந்தது. கிருஹஸ்தாசரமம் எவ்வளவு முக்யமாயிருந்தாலும் ஒரு காலத்தில் ஒரு ஆஸ்திகன் தன்னுடைய கடைசிநாளில்! கூடியமட்டிலும் ஆசாரம், நியமம், சாஸ்திர சிரவணம், முடியுமானால் யோகாப்பியாஸம் முதலானது செய்வதற்கு இப்பொழுதுகூட இருக்கின்றார்கள். பென்ஷன்பெற்று அநேக உத்தியோகத்தில் இருந்தவர்கள் பலபேர் காலத்தை எப்படி கழிப்பது என்று இருக்கிற பேர்கள் பலபேர் இருக்கிறார்கள். அவர்களுக்கு ஆஸ்திக ஸபை போல வைதிக சிரத்தையுள்ள சமூகங்கள் தகுந்த இடங்களில் சிறு "ஆச்ரமம்" ஏற்பாடு செய்தால் நலமாயிருக்கும். ஆச்ரமம் என்றால்பயந்து ஓடவேண்டாம். பழையபேரேயொழியவேறொன்றுமில்லை. இதற்காக காடு, மலை, வனாந்திரத்திற்குப் போகவேண்டாம். நல்ல கிராமத்தில் வசதியான இடத்தில் அதிக சிலவில்

லாமல் ஏற்பாடு செய்யலாம். அவரவர்கள் தன் கை செலவிலேயே இருப்பார்கள், இதனால் அதிக சிரமமில்லை. முக்கியமாக முன் ஏற்பாடுகள்செய்து ஒரு படித்த சாஸ்திரம் பயின்ற ஒருவித்வான் அல்லது பரிவ்ராஜகரோ வைத்து நடத்தினால் மிக சிரேஷ்டம். முதலில் கும்பகோணம் பக்கத்தில் அருகிலுள்ள ஏதாவது ஒரு கிராமத்தில் ஏற்பாடு செய்யலாம். அதேமாதிரி ஒவ்வொரு புண்ய க்ஷேத்திரங்களிலும் ஏற்பாடு செய்தால் நல்லது.

அதில் வஸிக்கும் ஆஸ்திகர்கள் மற்றவர்களுக்கு சாஸ்திர பிரசாரம், வேதபிரசாரம் இந்த காலத்துக்குத்தகுந்த லோக சேவை முதலானது செய்ய சௌகர்யமாயிருக்கும்.

அதனால் ஆஸ்திக கனவான்கள் இதைக் கவனித்து ஆஸ்திக பக்தியுண்டுபண்ணவேண்டிய இந்த ஆச்ரமத்தை ஏற்பாடு செய்யும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். K. S.

---

# ஹிந்துக்கள்—ஆர்யர்கள்.

தற்காலத்தில் பாரதகண்டத்தில்துலுஷ்கர், கிருஸ்தவர், பார்சிகள், பௌத்தர்கள், சமணர்கள் இவர்களைத்தவிர மற்றவர்களெல்லாம் ஹிந்துக்கள். (ஆர்யர்கள்) என்று அர்த்தமாயிருக்கிறது. தென்னாட்டில் ஜாதியென்னவென்றால் தன் ஜாதியைக் குறிக்காமல் பிராம்மணனல்லாதவனென்றுபுதுநடவடிக்கைகளில் ஒரு விந்தைகிளம்பியிருக்கின்றது அதுபோல் ஹிந்து, ஆர்யன், என்ற பதத்தை எவ்விதமாக நிர்ணயம்செய்வதென்று தெரியவில்லை. கணக்கில்லாத ஜாதிகள், ஆசாரங்கள், நம்பிக்கைகள் இவைகளிலெல்லாம் எது முக்கியம். இந்துக்களுக்கு பொதுவென்று குறிப்பிடுகின்றது அசாத்தியமாயிருக்கிறது. சில ஹிந்துக்கள் ஸம்ஸ்கிருத பாஷை அசல்தேசத்துபாஷையென்கிறார்கள். சில ஹிந்துக்கள் ஜாதியைத் துலைக்கவேண்டுமென்கிறார்கள். மற்றவர்கள் ஜாதிதான் இந்த தேசத்திற்கு முக்கிய அம்சமென்கிறார்கள். இவைகளையெல்லாம் கவனித்து

1. ஹிந்து அல்லது ஆர்யன் என்றால்யார்.

2. இந்த பல ஜாதிகளுக்கு பொதுவாககவனிக்கவேண்டிய ஆசாரமென்னது.

3. எல்லா ஹிந்துக்களுக்குமுக்கியமானகொள்கைஎன்னது

4. இக்காலத்தில் பழையகாலவழக்கங்களானக்ஷேத்திராடனம்தீர்த்தாடனம் இப்பொழுது அவசியமா.

(ரயில்செலவே யொழிய வேறு பலன் அல்பம்) தீர்த்த இடங்கள் மற்ற இடங்கள் இப்பொழுது அன்யமதஸ்தர்கள் நம்தேசம் பூராவும் பறந்திருப்பதால்பழய ஆசாரம்சுத்தமாயிருக்கிறதா. அல்லதுகெவனிக்கவேண்டுமா!

இவைகளை வித்வான்கள் கவனித்து தீர்மானம் செய்யும்படி கேட்டுக்கொள்ளுக்கிறேன். K. S.

---

# ஆசார நிர்ணயம்.

இப்பொழுது பல காரணங்களினால் ஆசாரங்கள் நம்முடைய ஆர்யஜாதிகளில் சீர்குலைந்திருக்கின்றது. முக்கியமான பழயஆசாரங்களை விடாமலும் சிஷ்டாள் சொன்னபடிக்கு விரோதமல்லாமலும் பிராம்மணஜாதிக்கு தற்காலம் தேசகாலத்தை உத்தேசித்து மூன்று வேதத்தார்களுக்கும் அனுஸரிக்கும்படி முக்யமாக ஸம்ஸ்காரங்கள், அதைச்சேர்ந்த கல்பங்கள், பூஜாவிதிகள், பிராயச்சித்தம், ஆசௌச நிர்ணயம். வெளிநாட்டிற்கு போய்வந்தால்அதற்கு பிராயச்சித்தம் இவைகளையெல்லாம் சேர்த்து படித்த வித்வான்கள் நாலாபக்கம் பறவியிருக்கும் நூல்களிலிருந்து சேர்த்து ஒரே கிரந்தமாய்செய்தால் ஆஸ்திகசிரத்தை உடையவர்களுக்கு மிகவும் உபயோகமாயிருக்கும். அது தேவபாஷையில்தானிருக்கவேண்டும். இவ்விஷயத்தை சன்னிதானத்திற்கு தாங்கள் தெரிவிக்கும்படியாய்கேட்டுக்கொள்ளுகிறேன். K. சுந்தரமய்யர்.

# பாடசாலைகளின் உபக்ரமம்.

நாளது ப்ரஜாபதிவருஷ கார்த்திகைமீ 5௨ (20-11-1931) வெள்ளிக்கிழமைதினம் காலை7-30 மணிக்கு தனுர்லெக்கினத்தில் ஸ்ரீகாஞ்சிகாமகோடி பீடாதிபதி ஜகத்குருஸ்ரீசங்கராசார்யஸ்வாமிகள் அவர்களின் அனுக்ரஹத்தை முன்னிட்டு பழமார்நேரி ஸ்ரீமான் அய்யுவய்யர் அத்வைத வேதாந்தபாடசாலையும், மஹா

மஹோபாத்யாய ஸ்ரீராஜு சாஸ்திரிகளவாள் சாஸ்திரபாட சாலையும், கும்பகோணம் ஸ்ரீஜகத்குரு மடத்தில் உபக்ரமிக்கப் பட்டது. அந்தஸமயம் கும்பகோணம் அத்வைதஸபை கௌன் ஸிலர்களும், பல பண்டிதமணிகளும், அனேக ஆஸ்திக கனதன வான்களும், விஜயம்செய்திருந்தார்கள். சுப லக்கினம் வந்ததும் ஸ்ரீமடம் விநாயகர் ஸன்னிதியில் அர்ச்சன தீபாராதனைகள் நடந்தன. ஸ்ரீகாஞ்சீ காமகோடி பீடாதிபதி அவர்களின் ஸ்ரீமஹா ஸன்னிதானத்திலிருந்து பரிபூர்ண பரமானுக்ரஹம் செய்து விபூதி பல மந்த்ராக்ஷத குங்கும ப்ரஸாதங்களுடன் ஸ்ரீநாராயணராவ் அவர்கள்மூலமாக அனுப்பப்பட்ட ஸ்ரீமுகம்பூஜா ஸாஸ்பமாக மஹாஜனங்கள் பக்திவிநயத்துடன் நின்றுகொண்டு சிரவணம்செய்கையில் ஸ்ரீமடம் ஆஸ்தானவித்துவான் வெங்கட ராமசாஸ்திரிகளால் படிக்கப்பட்டது. உடனே ஸ்ரீமான் அய்யு வையரவர்களும், பிர்மஸ்ரீ சாஸ்திர திலகம் மஹோபதேசகர யக்ஞஸ்வாமி சாஸ்திரிகள் அவர்களும் முறையே ஷை பாடசாலை களை அனுக்ஞா விக்னேசுவரபூஜாபூர்வமாக ஸங்கற்பித்து கிரஹப் பிரீதியும்செய்து உபக்ரமித்தார்கள். அய்யுலவயர் வேதாந்த பாடசாலையில் அத்யாபகராக நியமிக்கப்பட்ட வேப்பத்தூர் பிர்மஸ்ரீ வைத்யநாதசாஸ்திரிகளவர்கள் வந்திருந்தவித்யார்த்திகளை வைத்துக்கொண்டு சாந்திபூர்வமாக ஸூத்திர பாஷ்ய பாடப்பிர வசனம் செய்ய ஆரம்பித்தார்கள். பிர்மஸ்ரீ சாஸ்திர திலகம் மஹோபதேசகர், யக்ஞஸ்வாமி சாஸ்திரிகள் அவர்கள் தீக்ஷிதர் அவாள் திருவாய்மலர்ந்தருளிய மத்துவமத வித்துவம்ஸனம் முதலிய கிரந்தங்களில் அதற்காகவந்த வித்தியார்த்திகளுக்கு பாடப்பிரவசனம் செய்ய ஆரம்பித்தார்கள். அன்று பாடம் ஆனதும் உத்திரசாந்திசொல்லி வித்தியார்த்திகள் வந்தனம்செய் தார்கள். பிறகு இந்தபாடசாலோபக்ரமத்திற்கு வர ஸௌகரியப் படாத மஹா மஹோபாத்யாய வித்தியாவாசஸ்பதி பிரம்மஸ்ரீ குப்புஸ்வாமி சாஸ்திரிகள் அவர்கள் முதலியவர்கள் அனுப்பிய லெட்டர்கள் படிக்கப்பட்டன. அய்யுவையர். லக்ஷ்மி அம்மாள் அத்வைத வேதாந்த பாடசாலை பழமார்னேரி பிர்மஸ்ரீ P. J. அய்யுவையரவர்கள் 1931ஹ செப்டம்பர்மீ 23உ எழுதி வைத்திருக்கிற ரிஜிஸ்டரான டிரஸ்ட்டுபத்திரத்தில்கண்ட ஷரத்துப் படி அதில்கண்ட மூலதனத்தைக்கொண்டு கும்பகோணம்அத்வைத ஸபையின் கௌன்ஸிலால்நடத்தப்படவேணுமென்ற ஷை அய்யு

அய்யாவர்களின் மனோபீஷ்டப்படி நடத்தப்படுமென்றும், இத்தகைய பெரியதர்மத்தைச்செய்யநிச்சயித்த அய்யுவையாவர்களின் பாக்கியமே பாக்கியமென்றும், பண்டிதக்ராமத்தில் பண்டிதகுலத்தில் ஜனித்த அய்யாவர்களின் வம்சமே போற்றத்தக்கது என்றும் பலவிதமாக அய்யாவர்களின் தர்ம சிந்தனையைப் புகழாதார் யாருமில்லை. மகா-௱-௱-ஸ்ரீ அத்வைத ஸபா கார்யதர்சி ஸ்ரீமான் K. சுந்தராமய்யாவர்களின் அபிப்பிராயத்திற்கு இணங்கி மகா-௱-௱-ஸ்ரீ M. K. வைத்யநாதய்யாவர்கள் ஷை விஷயத்தை மிகச் சிறப்பித்து அரியதோர் உபன்யாஸம்செய்தார். “மஹா மஹோபாத்யாய ஸ்ரீராஜு சாஸ்திரிகளவாள் சாஸ்திர பாடசாலை” என்பது ஈசுவர அவதாரபூதர்களான ஸ்ரீமத் அப்பய்ய தீக்ஷிதாவர்களின் வம்சத்திலவதரித்து விசேஷமாய் வித்யோபதேசங்களையும் தர்மோபதேசங்களையும்செய்து அநேக சிஷ்யர்களையும், தார்மிகர்களையும் க்ருதார்த்தர்களாக்கி ஆசாரானுஷ்டாதிகளில் வஸிஷ்டாதிகளைப்போல் பரமபூஜ்யர்களாய் ராஜமன்னார்குடியில் விளங்கிவந்த மஹாமஹோபாத்யாய ஸ்ரீதியாகராஜமகிந்திராளுடைய ஞாபகச்சின்ஹமாய் சென்ற 1904-ம் வருஷத்தில் மன்னார்குடியில் ஆரம்பிக்கப்பட்டு ஆஸ்திகப் பிரபுக்களின் ஆதரவின்கீழ் பல வருஷங்கள் நடந்துவந்தது. சில வருஷங்களாக நின்றுவிட்டதை மறுபடியும் உஜ்ஜீவிக்கச்செய்யவேண்டுமென்று ஷை பாடசாலையின் ஆரம்ப தர்மகர்த்தாக்களில் இப்போதுள்ளவர்களான ப்ரம்மஸ்ரீ சாஸ்திரதிலகம் மஹோபதேசகர் யக்ஞஸ்வாமி சாஸ்திரிகளும், பிரம்மஸ்ரீ சித்தமல்லி சுப்ரமண்யசாஸ்திரிகளும், யத்னம்செய்து ஷை பாடசாலையை இனிமேல் கும்பகோணம் அத்வைதஸபை கௌன்ஸிலர்களே பொறுப்பேற்றுக்கொண்டு நடத்தவேணும் என்று கேட்டுக்கொண்டதை அனுஸரித்து ஷை ஸபை கௌன்ஸிலும் அங்கீகரித்திருக்கிறது. தனஸஹாயம் இன்றி இக்காரியம் நடைபெறாததுபற்றி ஆஸ்திக ஜனதனவான்கள் வேண்டிய திரவ்யஸகாயம்செய்து ஷை பாடசாலை ஆசந்திரார்க்கம் நடக்கச்செய்யவேண்டுமென்று ஷை தர்மகர்த்தாக்களும் அத்வைத ஸபா கௌன்ஸிலர்களும் கேட்டுக்கொண்டார்கள். ஷை உபக்ரம அழைப்புக்கிணங்கி வந்தவர்களுக்கெல்லாம் உபசாரவார்த்தைகூறி சந்தன பல தாம்பூலம்வழங்கஸபை கலைந்தது.

## கார்த்திகைமீ ௬௳ (21-11-1931)

மறுநாள் சனிக்கிழமை காலை 8-மணிக்கு சென்னை திவான் பகதூர் பிரும்மஸ்ரீ T, R. ராமச்சந்திரய்யரவர்கள் ஷெ ஜகத்குரு ஸ்ரீமடத்தில் "ஸம்ஸ்கிருதபாஷாபிவிருத்தி—பிராம்மணர்களின் கடமை" என்னும் விஷயத்தைப்பற்றி உபன்யாஸம் செய்தார்கள். வேறு வித்வான்களும் உபன்யாஸம் செய்வார்கள் என்று அழைப்புப் பத்திரிகையில் கண்டிருந்தபடி காலை8-மணிக்கு ஸபை கூடிற்று. முதல்நாள் விஜயம் செய்திருந்தவர்களும் மற்றும் பல பிரமுகர்களும் விஜயம்செய்தார்கள். அன்றும் காலையில் துவிதீயாவிர்த்திவிச்சித்தியில்லாமல் பாஷ்யபாடம் முதலிய பாடங்கள் சாந்திபூர்வமாக ஸங்கிரஹமாக நடத்தப்பட்டன. பெரியவர்கள் அனுப்பியிருந்த ஸ்ரீமுக வாலாற்றைச் சுருக்கமாகத் தமிழில் சொல்லி ஸ்ரீமஹா ஸன்னிதானத்தில் ஸ்ரீசாஸ்திரகளவாள் சாஸ்திரபாடசாலாபிவிருத்திக்காக பூர்ணானுக்ரஹம் செய்ததோடு ஒருவித்தியார்த்திக்கு மாதந்தோறும் கொடுக்கவேண்டிய உபகாரதிரவியம் ஒருவருஷத்திற்குள்ளதை ஸுவர்ண (பவுன்)ரூபமாகவே அனுக்கிரகித்ததை ஸ்ரீ நாராயணராவ் அவர்கள் ஸபா கௌன்ஸிலர்களிடம்சேர்ப்பித்து ஸ்ரீ மஹாஸன்னிதானத்தில் அனுக்ரஹபூர்வமாயனுப்பப்பட்ட 150 ரூ. பெறுமானமுள்ள அத்வைத கிரந்தங்களையும் சேர்ப்பித்தார்கள். 8-30-க்கு பிரம்மஸ்ரீ T. R ராமச்சந்திரய்யரவர்கள் குறிப்பிட்டவிஷயங்களைப்பற்றி வெகுஅழகாகவும்வெகுஉருக்கமாயும், சபையோர்மனம் சந்தோஷப்படும்படியாயும் சுருதிஸ்மிருதிகளிலிருந்து ஸமயோசிதமானமேற்கோளுடனும், ஸ்ரீபரமாசார்யாள் பெருமை-அன்னார் உலகத்திற்குச்செய்த பரமோபகாரம் முதலிய ஆழ்ந்த அபிப்பிராயம் வெளிப்படும்படியாயும்பக்திரஸம் ததும்பும்படி உபன்யஸித்து பெரிய தீக்ஷிதரவாளுடையதிவ்யசரித்திரச் சுருக்கத்தையும், மன்னார்குடிஸ்ரீசாஸ்திரிகளவாளுடையஸதாசாரம்முதலியசிறந்தகுணாதிசயங்களைப்பற்றி அரிய பெரிய உபன்யாஸஞ்செய்தார்கள். அதில் அவதாரபுருஷாளான பரமாசார்யாள் பிரவிருத்திப்பித்த வைதிக வழியில் ஸனாதனதர்மி ஒவ்வொருவருமீடுபடுவதே பிராம்மணர்களின் கடமையென்றும், அதற்கு அப்புவய்யர் போன்ற தார்மிக சிகாமணிகள் உதாஹரணமென்றும், அழகாய் உபன்யாஸித்தார்கள். பிறகு சென்னை அட்வகேட் ஸ்ரீமான் K. பாலசுப்பிரமணியய்யர் அவர்கள் வெகு ரஸமாயும் வெகு அழகாயும், ஒரு மணிநேரம் அதேப்யாவிஷயங்களைப்பற்றியும் ஆர்யாவர்த்த தேசத்தின் பொறுமை

யைப்பற்றியும், மேதாதி வியாக்கியானத்தில் கூறிய அந்த ஆர்யாவர்த்த சப்தத்தின் வியுத்பத்தி அவசியம் கேவ ளிக்கத்தக்கதென்றும், அதிலிருந்து எவாது ஆதிக்கத்திலும் ஆர்யர்களுக்கு அழிவு இல்லையென்றும், அத்தகைய புண் ணிய பூமியில்பிறந்த ஸநாதனதர்மிகள் ஸ்வதர்மத்தை எவ்விதத்தி லும்விடக்கூடாதென்றும் உபன்யஸித்தார்கள். சந்தனதாம்பூலம் வழங்க ஸபை கலைந்தது.

அன்றுமாலை 7-30க்குமேல் மன்னார்குடி ஸ்ரீசாஸ்திரிகள் அவாளுடைய திவ்ய சரித்திரத்தை சித்தமல்லி பிரம்மஸ்ரீ சுப்பிர மணிய சாஸ்திரிகள் உபந்யஸித்தார்கள். அன்றைய தினமே சாஸ்திரிகளவாள் சாஸ்திரபாடசாலைக்குச் சில பிரமுகர்கள் திரவ்ய ஸஹாயம் செய்தார்கள். அன்றுமுதல் ஷை இரண்டு பாடசாலை களும் ஸ்ரீமடத்திலேயே நடத்தப்படுகின்றன. வித்தியார்த்திகள் படித்துவருகிறார்கள். வித்தியார்த்திகள் வேதாத்தியயனம் செய்தவர்களாகவும், ஸாமான்யசாஸ்திரம் படித்தவர்களாகவும், சிஷ்டர்களாகவுமிருக்கவேண்டுமென்பதாகச் சொல்லப்படுன்றது. சாஸ்திரிகளவாள்பாடசாலையில்பிரஸ்தானத்ரயபாஷ்யம் படித்தவர் கள் தான் சேரலாம். அய்யாவையர்வேதாந்தபாடசாலையில்பிரஸ்தா னத்ரயபாஷ்யம் படிக்கவேண்டியவர்கள் சேரலாம். வித்யார்த் திகளுக்கு மீ 1-க்கு 15. ரூபாய் உபகாரத் திரவியம் கொடுக்கப் படுமென்று சொல்லப்படுகின்றது. இந்தமாதிரி அதிகாரிகள் சேர விரும்பினால் கும்பகோணம் அத்வைத ஸபை கார்யதர்சிக்கு மனுசெய்துகொள்ளலாம்.

ஆஸ்திகன்.

குறிப்பு:—சென்றவார கதைக்கொத்தில் குரு என்பதைமாற்றி ருரு என்று படிக்கவும்.

# சிறுவருக்கான சிறுகதைக்கொத்து.

## குருபக்தன். கசன்

1. தேவரும் அஸுரரும் ஒரு தந்தையின் பிள்ளைகள். தாய்மாத்திரம் வேறு வேறு. ஆதலால் குணமும் வெவ்வேறே. நல்லகுணமுடையவர் தேவர். கெட்டகுணமுள்ளவர் அஸுரர். இவ்விருவருக்கும் ஒற்றுமை இருக்குமோ? நிதம் சண்டைதான். சண்டையில் ஜயமும் அபஜயமும் யாருக்கு சொந்தம்? ஒரு ஸமயம் தேவர் ஜயிப்பார். மற்றோர் ஸமயம் அஸுரர் ஜயிப்பார். தேவருக்குக்குரு பிருஹஸ்பதி. அஸுரர்குரு சுக்கிராச்சாரியார்.

இரண்டு குருவும் நல்ல தபஸ்ஸுள்ளவர். ஆனாலும் அஸுரர் குருவினிடம் ஓர் அபூர்வ வித்தை இருந்தது. அது ஸஞ்ஜீவினி எனப்படும். இதால் செத்தவரைப் பிழைப்பிக்கலாம். மந்த்ரத்தின் மஹிமை அளவில்லாதது.

2. இதனால் சுக்ரர் அஸுரரில் இறந்தவரைப் பிழைப்பித்து வந்தார். இதைத் தேவகுரு அறியார். ஆகலால் தேவர்கள் தம் குருவின் மூத்தபுதல்வரான கசனை வேண்டிக்கொண்டனர். குருபுத்ரரே! நீரும் குருவுக்கு ஸமம். எங்களுக்கு உபகாரம் செய்யவேண்டும். சுக்ரரிடம்சென்று ஸஞ்ஜீவினியைக் கற்று வாரும் என்றனர். தகப்பனைப் பணிந்து உத்தரவுபெற்றான் கசன். சுக்ரரிடம்போனான். தன்னைச் சிஷ்யனாக ஏற்றுக்கொள்ளும்படி வேண்டினான். நல்ல குணமும் அடக்கமுமுள்ள கசனை ஏற்றுக்கொண்டார் சுக்ரர். நற்குணமுடையவனைச் சத்ருவும் வணங்குவான்.

3. தவறாமல் குருபணிவிடை செய்தான். குருவின்பெண் தேவயானை. அவளை உடன் பிறந்தவள்போல் எண்ணினான். அவளுக்குப் பழங்களையும் புஷ்பங்களையும் கொண்டுவந்து கொடுப்பான். இருவரும்பிரியாதஸ்நேகிதரானார்கள். ஒருநாள்குருவின் பசுவைமேய்க்க கசன்காட்டுக்குப்போனான். வழியில் அஸுரர்கள் இவனைப்பார்த்தார்கள். தேவர்வகுப்பைச்சேர்ந்த இவன்நம்குருவிடம் வித்யை கற்பதா என்று பொறாமைகொண்டார்கள். துண்டுதுண்டாக கசனை வெட்டி நாய்க்கு ஆஹாரமாகப் போட்டுவிட்டார்கள் பொறாமையும்ஹிம்ஸையும் அஸுரர்கள்குணமாகும்.

4. ஸாயங்காலம் பசுக்கள்மாத்திரம் வந்தன. கசனைக் காணவில்லை, அவன் தோழி தேவயானி, கசன் வருவான் அழகான புஷ்பமும் ருசியான பழமும் கொண்டுவருவானென்று வாசலில் நின்று வழிபார்த்தாள். வரவில்லை. அக்னிஹோத்ரம் செய்துகொண்டிருக்கும் அப்பாவிடம் போனாள். அப்பா! கசனை காணோமே! அவனில்லாமல் நான் சாப்பிடமாட்டேன் என்றாள். ஸஞ்ஜீவினிவித்தையால் அவனை எழுப்பிக்கூப்பிட்டார். உடனே வந்துவிட்டான். எங்கே போயிருந்தாய் என்று தேவயானி கேட்டாள். நடந்ததைச் சொன்னான், வித்யையின் மஹிமையே மஹிமை!

5. மற்றொருதினம் தனக்கு புஷ்பம் வேண்டுமென்றாள் குருபுத்ரி, கசன் காட்டிற்குப்போனான். செத்தவன் பிழைத்ததைக்கண்டு அஸுரர் கோபங்கொண்டனர். மறுபடியும் இவனை

கொன்று அரைத்து ஸமுத்ர ஜலத்தில் கரைத்துவிட்டார்கள். காத்துக்காத்துப் பார்த்தாள் தேவயானி. கசன் வரவில்லை. அஸுரரே கொன்றிருக்கவேண்டும் என்று நினைத்தாள். சுக்ரரிடம் வந்து கதறினள். மறுபடியும் மந்த்ரத்தின் மஹிமையால் கசனை எழுப்பினர். இதை அஸுரர்கள் பார்த்தனர். பரமகோபம் வந்துவிட்டது. மூன்றும் முறைகொன்று சாம்பலாக்கிமதுவுடன் சுக்ரருக்கு கொடுத்துவிட்டனர். அதை அறியாமல் அவரும் சாப்பிட்டுவிட்டார்.

6, முன்போலவேதேவயானி கச! கச!என்றுகதறினள்.பெண் அவனிடம் வைத்திருக்கும் ஆசை அதிகம். அவனை அஸுரர் அடிக்கடி கொல்லுகின்றனர். அவனை எழுப்பாவிட்டால் நம் பெண் பிழைக்கமாட்டாள் என்று யோசித்தார் சுக்ரர். கசா என்று அழைத்தார் அவர்வயிற்றிலிருந்தே ஏன் என்றான் அவன். ஆஹா என் வயிற்றில் எப்படி வந்தாய் என்றார். வந்தவழியைக் கூறினன். மதுபானத்தால்வரும் தீங்கிது. இனியாராவது பிராஹ்மணர் மதுவைக்குடித்தால் மஹாபாதகம் செய்தவராவர். இவ்வுலக ஸுகமும் மறு உலக ஸுகமும் அவருக்கில்லையெனச் சபித்தார். ஸ்வர்ணத்தைத்திருடுவது மதுவைக்குடிப்பது பிராஹ்மணனைக் கொல்வது குருபத்நீயுடன் ரமிப்பது இப்பாபம் செய்பவருடன் சேர்வது இவ்வைந்தும் மஹாபாதகம்.

7. குழந்தாய்! கசனை எழுப்பினல் நான் சாவேன். கசன் வேணுமா நான் வேண்டுமா? என்றார் சுக்ரர். இருவரும்தான் வேண்டும். ஒருவர் இல்லாவிட்டாலும் நான்பிழைக்கமாட்டேன் என்றாளவள். கசனை அழைத்து அம்மந்திரத்தை உபதேசித்தார். சுக்கிரர் மந்திரத்தைச்சொல்லி அழைத்தார். கசன் எழுந்தான். சுக்ரர் இறந்தார். குருபக்தியால் தன்குருவுக்கு சாவுகூடாதென்று அதே மந்திரத்தால் அவரை எழுப்பினன். கசன் தர்மத்திற்கு பயந்து குருவினிடம் உள்ள பக்தியால் தன்னை எழுப்பிய கசனை மெச்சினர் குரு. வித்யை முடிந்தது ஊருக்குப்போய்வா என்றார். அவனும் குருவை வணங்கிக் கிளம்பினன்.

8. தேவயானி இவனைக்கல்யாணம் செய்துகொள்ள ஆசை கொண்டாள். கசன் என் குருபுத்ரி என் குருவுக்கு ஸமம். உன்னை மணப்பது சாஸ்திரவிரோதம். அதர்மத்தைச் செய்யலாமா? என்று நியாயமாக போதித்தான். அவள்மநதில் அது ஏறவில்லை என்னாசையைக் கெடுத்தால் உனக்கு இந்த வித்யை பலிக்காது.

என்று சாபங்கொடுத்தாள். அவன் தர்மம் தவராமலிருந்தால் அவனுக்கு மந்த்ரம் பலிக்காவிட்டாலும் அவன் மற்றவருக்கு அதை உபதேசம் செய்ததால் அவர்களுக்கு பலித்தது. தர்மத்தைக்கைவிடாததால் வந்த நன்மை இது இல்லையா?

9. சாஸ்த்ரவிதியை நீ மீறியதால் உன்னை ப்ராஹ்மணன் மணக்கமாட்டான் என்றான்கசன் தேவயானியை. அதேபோல் தேவயானியை ஓர் க்ஷத்ரியனே மணந்துக்கொண்டான். சாஸ்திரங்கூறியபடி செய்வதே நலமல்லவா?

## வாரவிருத்தாந்தம்.

சிறந்தவேலை — திருவாலி திருநகரியில் ஸ்ரீபாகாலபக்தஜன ஸபையார் தநுர்மாஸத்தில் உஷக்காலத்தில் எழுந்து பகவன் நாமாவை பஜனை செய்துகொண்டு ஆலயப் ப்ரதக்ஷிணம்செய்வதாக தீர்மானித்தனர். எப்பொழுதும் காலையில் எழுந்திருத்தல் தேகாரோக்யம் என்பதுமாத்ரமல்ல. பாலோகத்திற்கும் ஸாதனமாகும். தேவர்களுக்குப் பகல்வேளை உத்தராயணம். அதற்கு முந்திய தநுர்மாஸம் அவர்களுக்கு அருணோதய வேளையாகும். மாதங்களில் மார்க்கசீர்ஷமாக இருப்பதாக பகவான் கீதையில் கூறினர். அச்சமயம் பகவந்நாமாவை உச்சரிப்பது மிகவும் சிறந்த தர்மம். ஸகல பாரதர்களும் அவ்வேளையில் எழுந்து பகவானை த்யாநம்செய்து இஹபாஸுகம்பெற வேண்டுகை.

வழி காட்டுகிறார்: — தேவகோட்டையில் நகரத்தார் எனும் நாட்டுக்கோட்டை செட்டிமார்கள் ஓர் சிவன்கோயிலைக்கட்டி ப்ரதிதினம் ஸ்வாமி தர்சனம் செய்துவருகின்றனர். அவ்வாலயத்தில் ஓர் தர்மகர்த்தா தனது ஸொந்த சிலவில் ஸ்ரீராமாயண உபன்யாஸம் நடத்தினர். அது முடிந்தவுடன் ஸ்ரீஹாலாஸ்ய மாஹாத்ம்யத்தை உபன்யஸிக்கும்படி ஏற்பாடு செய்திருக்கிறார். ஆலயமல்லது மடங்கள் ஜீவனது பாலோக நன்மையையும் அளிக்குமிடம். ஆதலால் ப்ரதிதினம் ஏதாவது ஸத்கதாகாலக்ஷேபங்களை அங்கு நடத்துவது மிகவும் உசிதமான கார்யம். கோவிலதிகாரிகள் இதைக் கவனிக்கவேண்டுகிறோம்.

பெரிய நன்கொடை: — அமராவதி ஜில்லாவைச்சார்ந்த ஓர் தார்மிகர் தனதுபாட்டனாருடைய ஞாபகச்சின்னமாக 5000 ரூபாயையும், ஆண்டுதோறும் 500ரூபாய்வரும் 50 ஏக்கர் நிலத்தையும் ஓர் பஞ்சாயத்தை ஏற்படுத்தி அவர்வசம் ஒப்படைத்திருக்கிறார். இந்நிதியைக்கொண்டு அஹிம்ஸையையும் ஸத்யத்தையும் ப்ரசாரம் செய்யவேண்டுமென்பது அவர் கொள்கை. இதைக்கொண்டு வர்ணாச்ரமதர்ம விரோதமில்லாமல் ஷெ. ப்ரசாரமசெய்தால் தாக

பலத்தை தாதா அடைவர். எப்படி ஆயினும் மநம்வந்து தாநம் செய்தமட்டில் அவரைக்கொண்டாடாமலிருக்க முடியாது.

ஸத்ஸங்கம் வாழ்க:—11உ மாலை சென்னை திலாஜிகல் ஹைஸ்கூல் ஸத்சங்கத்தில் நாலாவது ஸதுபதேச பகுதி பூர்த்தியானது. ஆங்கிலம்கற்று நமது மதமறியாமல் மதங்கொண்டு நம்முன்னோரை நிந்திப்பது தற்காலம் வெகு ஸஹஜம். ஷை மாணவர்களுக்கு ஆஸ்திக்யம், ச்ரத்தை, விநயம் முதலியவைகளைப் புகட்ட ஷை கலாசாலைத்தலைவரும் உபாத்யாயரும படும் பாடு கொஞ்சமல்ல. ராமாயணம் பாகவதம் திவ்யப்ரபந்தம் பொது தர்மம் என ஒவ்வொரு பகுதியிலும் எவ்வேறு உபன்யாஸங்கள் தனித்தனி பண்டிதரால் நடத்தப்பட்டது. மாணவரும் மற்றோரும் மநமுவந்து உபன்யாஸகருக்கு ஏதேனும் தக்க ஸம்மாநம்செய்கின்றனர். இளம்மூளையில் நல்விஷயத்தை ஏற்றும் பாக்யம் இக்கலாசாலைக்கே கிடைத்திருக்கிறது. ஸத்ஸங்கமும், கலாசாலையும் தலைவருடன் மாணவர்களும் வாழ்க!

ஸ்ரீ ராமாலயம்:— தநுஷ்கோடி ஸ்டேஷனருகில் ஸ்ரீமான் பட்டணம் தாதாசாரியார் மிகச்ரமப்பட்டு பல்லாயிரம் ரூபாய் சேர்த்து ஓர் அழகிய ராமர் கோவில் கட்டி அதனருகே யாத்ரிகர்கள் தங்குவதற்கும் ஓர் விசாலமான இடமும் தீர்த்தம் முதலிய மற்ற ஸௌகரியங்களும செய்திருக்கிறார். இதனால் பயன்பெறும் யாத்ரீகர்கள் மநமார ஆச்சாரியாரை வாழ்த்துவார்கள். உத்தம தீர்த்தகரையில் உயர்ந்த ஆலயமும் ஸத்ரமும் கட்டின இவரை ஸ்ரீ ராகவனும் தர்மதேவதையும் நன்கு கடாக்ஷித்து ஆசீர்வதிப்பான்றோ?

உபந்யாஸமும் ஸம்மானமும்:—ஈரோடு மஹாஜனங்கள் ஓர் வித்வானை அழைத்து ஸ்ரீமத்ராமாயணம், விவாஹம ஸந்த்யாவந்தனம் முதலிய விஷயங்களை உபன்யஸிக்கும்படி ஏற்பாடு செய்தனர். உபன்யாஸகருக்கு ஓர் தங்கப்பதக்கம் ஸம்மானம் செய்தனர். குடும்பத்திற்கு வேண்டியதநத்தைமாத்ரம்பெற்று தர்மோபதேசம்செய்ய எண்ணிறந்த பண்டிதர்கள் முன்வருவர். ஆதலின் ஆஸ்திகர் முன்வந்து தாங்களும் ச்ரவணம் செய்வதுடன் ஓர் குடும்பத்தைக்காத்த புண்யத்தையும் அடைவாரென நம்புகிறோம்.

இதிஹாஸோபன்யாஸம்:—14உ சென்னை லிங்கசெட்டித் தெருவில் ஸ்ரீசங்கரமடம் புராணப்ரவசந ஸபையார் ஸ்ரீமஹாபாரதத்தை உபன்யஸிக்கும்படி ஏற்பாடு செய்தனர். ஏற்கனவே பதினெட்டு புராணங்களையும் ஸ்ரீமடத்தில் உபன்யஸிக்க ஏற்பாடாயிருக்கிறது. ஆங்காங்கு இதேபோல் புராணேதிஹாஸங்களை உபன்யஸித்து ச்ருத்யர்த்தத்தை மஹாஜனங்களுக்கு எடுத்துரைத்தால் உலக நன்மையுண்டு. ஸ்ரீவத்ஸ ஸோமதேவசர்மா.